**முதலாவது கூடுதல்  சார்பு நீதிமன்றம், விழுப்புரம்**

**O.S. No. 511/2023**

**Witness PW 1**

| பெயர் | கலியபெருமாள் | தொழில் | |
|---|---|---|---|
| த/பெ | கண்ணப்பன் | வயது | |
| ஊர் | | தேதி | 27.03.2026 |
| மாவட்டம்; | | | |

இன்று (27.03.2026) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை**

**சத்தியமாக சொல்கிறேன்**

இந்த வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றுசொன்னால் சொத்து எங்களுடையது என்று கேட்டு வழக்கு போட்டுள்ளேன். இந்த வழக்கு யார் யார் மீது தாக்கல் செய்துள்ளேன் என்றுசொன்னால் சங்கர், ஜனார்த்தனன், தமிழரசி ஆகியோர் மீது தாக்கல் செய்துள்ளேன். வேறு நபர்கள் பேரில் தாக்கல் செய்யவில்லை. வழக்கு சொத்தின் சர்வேஎண் 364 கோலியனூர் கிராமத்தில் உள்ளது. அதன்விஸ்திரணம் 25 செண்ட். அந்த சொத்திற்கான 4 பக்க எல்லைகள் ஊரல் வாய்காலுக்கு கிழக்கு, கலியபெருமாள் நிலத்திற்கு தெற்கு,  ஜனார்த்தனன் நிலத்திற்கு மேற்கு மற்றும் வடக்கு, நாகராஜ் நிலத்திற்கு வடக்கு, அப்பா பெயர் கண்ணப்ப கவுண்டர், அம்மாவின் பெயர் பட்டம்மாள். கண்ணப்ப கவுண்டர் 1996 ல் இறந்துவிட்டார். பட்டம்மாள் 1979 ல் காலமாகிவிட்டார். பட்டம்மாள்

என்பவர் உயிருடன் இருக்கும்போது பிரதிவாதிகள் அனுபவித்து வந்தனர் என்றால் இல்லை. நாங்கள் தான் அனுபவித்து வந்தோம். பிரதிவாதிகள் எத்தனை வருடங்களாக சொத்தினை வைத்திருக்கிறார்கள் என்றால் நாங்கள் தான் அனுபவத்தில் வைத்துள்ளோம். கண்ணப்பன் மற்றும் பட்டம்மாள் ஆகியோருக்கு 3 பிள்ளைகள் அவர்கள் பெயர் பூங்காவனம் , தனம் மற்றும் நான் பெண் வாரிசுகள் யாரும் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் நான் தான் அவர்களுக்காக வழக்கு தாக்கல் செய்து வந்தேன். அவர்களுக்கு வயதாகிவிட்டது. அவர்களை நான் சாட்சியாக விசாரணை செய்ய போவதில்லை. பெண் வாரிசுகளுக்காக வழக்கு தாக்கல் செய்தோம் என்பதற்கு அவர்களிடம் இருந்து ஏதேனும் பிரமாண வாக்குமூலம் பெற்று தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை வாய்மொழியாக சொல்லியுள்ளேன். எந்த தேதியில் வில்லங்கம் பெற்று பார்த்தேன் என்றால் 2015 ம் வருடம் வில்லங்கம் பெற்று பார்த்தேன். நான் சார்பதிவாளர் அலுவலகத்தில் இருந்து வாங்கினேன். வழக்கு சொத்திற்கான பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் பட்டம்மாள் பெயரில் உள்ளது இன்றுவரை அவர்கள் பெயரில் தான் உள்ளதா என்றால் அவர்கள் பெயரில் தான் உள்ளது. பட்டா எண். 364

**மேலும் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledge by him/her to be correct.

(sd/-M.S. Varalakshmi)
I Additional Subordinate Judge,
Villupuram